بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

# ஜும்ஆ உரை

## தமிழ்நாடு ஜலஸா ஸாலானா

### ஃகலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள்

11 ஜமாஅத்துல் அவ்வல் 1442 AH
(27 டிசம்பர் 2020)



வெளியீடு : அமீர் ஜமாத்,
TJSAL பத்திரிகை குழுமம்,
தமிழ்நாடு. செல் : 917502272774
E.Mail : Jusai.tn@gmail.com

# السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

**அல்லாஹ்வின் சாந்தியும் அருளும் உங்கள் அனைவரின் மீதும் நிலவட்டுமாக!**

நாம் முதலில் அல்லாஹ் (துபாரக)விற்கு எண்ணற்ற (முறையில்) நன்றி செலுத்த வேண்டும், ஏனென்றால், அவனுடைய மாபெரும் கருணையால், கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் (சூழல்) நிலவுகின்ற போதிலும், ஜலஸா ஸலானா 2020 இல் ஏற்ப்பாடு செய்யும் பாக்கியத்தையும், நன் மதிப்பையும் அவன் ஜமாஅத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் தமிழ்நாட் டிற்கும், அதேபோன்று கேரளாவிற்கும் வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்! ஸும்ம அல்ஹம்துலில்லாஹ் என்று நான் கட்டாயம் கூற வேண்டும்.

உலகம் முழுவதும் நிச்சயமற்ற (குழப்பம் சூழ்ந்த) நிலை காணப்படுகின்றது; உலகம் முழுவதும் பேரழிவை ஏற்படுத்தி வருகின்ற கொரோனா வைரஸ் / கோவிட்-19 (பாதிப்பி)லிருந்து தீவுகளும்கூட விடுபட்டதாக இருக்கவில்லை. மேலும் உலகம் முழுவதும் பேரழிவை ஏற்படுத்துதின்ற கோவிட்-19 னால் மில்லியன்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் உலகெங்கிலும் பத்துலட்சத்திற்கும் அதிகமானோர் மரணமடைந்துவிட்டனர். இதற்கும் மேலாக உலகளாவிய பொருளாதார நெருக்கடி, வேலை இழப்பு, ஊழல், (இங்கே மொரீஷியஸில் கூட) வறட்சியும், சமூக பிரச்சினைகள், போதைப்பொருட்கள், வெள்ளப்பெருக்கு மற்றும் பலவகையான பேரழிவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இஸ்லாத்தின்-ஸஹீஹ் அல் இஸ்லாத்தில், அதுபோன்று உலகம் முழுவதிலும் உள்ள மனித நேயத்தின் பாதுகாப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் பிரார்த்தனை செய்ய வேண்டியது நம் மீது கடமையாக் கப்பட்டுள்ளது. பூமியில் (நமது) வாழ்வின் காலஅளவை நாம் அறிந்திருக்க வில்லை. ஏற்கனவே எத்தனை பேர் மரணித்துப்போனார்கள் என்பதை நம்மால் (சரியாக) அறிந்து கொள்ளமுடியாது. இக்காலத்தின் இக்கட்டான இந்நிலையை பற்றி மக்களுக்கு எச்சரிப்பது நமது கடமையாகும். இக்காலம் இன்னும் மிக ஆபத்தானது என்றும் கியாமத்தின் (இறுதி நாளின்) நெருங்குதலை பிரகடனம் செய்யும் என்றும் அல்லாஹ் (துபாரக) எனக்கு பல முறை அறிவித்துள்ளான்.

**சொல்லப்பட்டபடி, மரணம் பல வடிவங்களில் வெளிப்படும்: கொடிய வைரஸ்கள் (COVID-19 ஐப் போலவே, எதிர்காலத்திலும் இன்னும் ஆபத்தான வைரஸ்கள் தோன்றும்) நான் இன்று என்ன கூறுகிறேன் என்பதையும்,, அல்லாஹ் எனக்கு எதனை வெளிப்படுத்தியுள்ளான் என்பதையும் நம்புங்கள்! வருங்காலத்தில் தோன்றப் போகும் வைரஸ் மிக மிக மிக மிக ஆபத்தானது என்பதையும் நம்புங்கள்¡ - அதன் பின்னர் மூன்றாம் உலகப் போர் நமக்கு (மிக அருகில் உள்ளது), பஞ்சம், வறட்சி, வெள்ளப் பெருக்கு, குற்றச் செயல்கள், இன்னும் கூடுதலான பேரழிவை ஏற்படுத்தும் [நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான இளைஞர்களை (சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை) கொல்கின்ற] போதை மருந்துகள், பூகம்பங்கள் (பலர் தங்கள் உயிரை இழப்பார்கள், மேலும் பலர் அனாதைகளாகவும் விதவைகளாகவும் ஆகிவிடுவார்கள்),**

**இன்னும் பல மிகவும் சோகமான செய்தி: நீங்கள் அனைவரும் இதை குறித்துக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை (பற்றி) நான் இன்று கூறுவதை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்!. என்ன நடந்தது என்பதையும் நீங்கள் கண்டுள்ளீர்கள்!, மேலும் அடுத்த ஆண்டு இதை விட இன்னும் அதிகமாக (பேரழிவுகள்) ஏற்படும். ஊழலும் உள்ளது, குறிப்பாக அது அதிகாரத்தில் இருப்பவர்களிடம் அதிகரித்து விடுதல், போன்றவை.**

இத்தகைய பேரழிவுகள் நிகழும்போது, பௌதீகவதிகள் துக்கமடைந்து, வருகின்ற சிரமங்களுக்கு (துயரங்களுக்கு) முன் தங்கள் மனதை இழந்து விடுகிறார்கள்.

மார்க்கத்தின் வழியில் நாம் இரண்டு வகையான கஷ்டங்களை எதிர் கொள்கிறோம். இரண்டில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட (ஒப்புக் கொள்ளப்பட்ட) சிரமம் ஆகும். உதாரணமாக: ஒரு நபர் மசூதியில் பிரார்த்தனை செய்ய தனது வீட்டை விட்டு வெளியேறும்போதோ, அல்லது மக்கள் இரவில் (பிரார்த்தனைக் காக) எழுந்திருக்கும் போதோ அல்லது ரமலான் மாதத்தில் பசியையும் தாகத்தையும் தாங்கிக்கொள்ளும் போதும், புனித யாத்திரையின் (ஹஜ்) போதும் கூட ஒரு நபர் பல கஷ்டங்களை சந்திக்க நேரிடும். ஜகாத்திற்காக, நாம் நமது பொருட்களை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டி உள்ளது, அல்லாஹ் நமக்கு என்ன வழங்கயுள்ளானோ, அதை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். எனவே, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள பொருட்களை மற்றவர்களுக்கு, மற்ற ஏழை மக்களுக்கு நாம் வழங்க வேண்டும். இவை (அனைத்து) மனிதன் (தாமாகவே முன்வந்து) ஒப்புக்கொள்ளும்படியான கஷ்டங்களாகும். மேலும் அவன் செய்த செயல்களுக்கு (அதற்கேற்ற) வெகுமதியைப் பெறக் கூடிய வனாகவும் இருக்கின்றான். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் அவன் தனக்கு எஞ்சியதை (மட்டும்) தேர்ந்தெடுப்பதும்கூட நிகழ்கின்றது. இந்த நிகழ்வின் காரணமாக பரிசுத்தமடைதல் ஒருபோதும் முழுமையடையாமலும், அவனது இலக்கிற்குறிய பாதை விரைவாக நிலைநாட்டப்படாமலும் உள்ளது.

**(இரண்டாவதாக) வானத்திலிருந்து நமக்கு வருகின்ற கஷ்டங்களைப் பொறுத்தவரையில், மனிதனுக்கு வேறு எந்த வழியும் இல்லை, தன்னையும் மீறி அவற்றை ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்; மேலும் இந்த காரணத்தினால் தான், இதுபோன்ற கஷ்டங்களின் வாயிலாக மனிதன் இறைவனின்-அல்லாஹ் (தபாரக)வின் நெருக்கத்தை(யும்) அடைய முடியும்.**

இப்போது கவனித்துப் புரிந்து கொள்ளுங்கள்:இந்த இரண்டு கஷ்டங்களையும் அல்லாஹ் (சுப்ஹான) உங்களுக்காகவும், நம் அனைவருக்காகவும் தயார் செய்துள்ளான். முதலாவதை, இதை நீங்கள் கடந்து செல்ல வேண்டும், மேலும் இரண்டாவது வானிலிருந்து வரக்கூடியதாகும். பல சாக்குப்போக்குகளை முன்வைத்து முதல் கஷ்டங்களை (தாமாகவே முன்வந்து) அனுபவிக்க பெரும்பாலான மக்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் வானிலிருந்து வரும் பேரழிவுகளிலிருந்து தன்னை யார்தான் காப்பாற்றிக்கொள்ள இயலும்? மனிதனுக்கு ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நம்மால் என்ன சொல்ல முடியும்? இறைவனின் விருப்பத்தை நம்மால் (ஒருபோதும்) எதிர்க்க முடியாது! ஒரு நம்பிக்கையாளரின் அடையாளம் என்பது பொறுமையுடன் நிலைத்திருப்பது மட்டுமல்ல, மாறாக மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக் கொள் வதுமாகும். ஏனெனில் அவருடைய மகிழ்ச்சி அல்லாஹ் (தபாரக) வின் மகிழ்ச்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த தரம் மிக உயர்ந்ததாகும்;

ஏனென்றால் ஒரு கடினமான தருணத்தில் அல்லாஹ்வின் மகிழ்ச்சி, உங்களது (சொந்த) இன்பத்தை முந்தி விட வேண்டும். பயன் பெற்கூடியவர் (அதாவது நாம்) பயன் அளிக்க கூடியவனை (இறைவனை) முன் நிறுத்த வேண்டும்.

**இன்றே உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்!. இன்றிலிருந்தே, நாம் ஒவ்வொருவரும் நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்! நாளை ஒருபுறம் இருக்கட்டும், இன்று என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. நிச்சயமாக, அல்லாஹ்வின் கட்டளைப்படி கஷ்டங்கள் வரும். நீங்கள் ஒவ்வொருவரும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டும் பாவ மன்னிப்பு கோரியும் அல்லாஹ் (துபாரக) வின் மகிழ்ச்சியில் இன்பம் காண வேண்டும்.**

எனது சஹாபாக்களில் பெரும்பான்மையினரான (ஜமாஅத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் உறுப்பினர்கள்), இளைஞர்களையும் முதியவர்களையும் ஒன்றி ணைப்பதில் தமிழ்நாட்டின் இந்த ஆண்டு மாநாட்டை (ஜலஸா ஸாலானா) விட வேறு எந்த (நிகழ்ச்சி) சாதகமானதாக இருக்க முடியும்? இந்த மாநாடு (ஜலஸா சலானா) கவனச்சிதறல்கள் ஏற்படுவதில் இருந்தும் தூரமானது. அதற்கு உலக நோக்கங்கள் எதுவுமில்லை, ஏனெனில் அதன் நோக்கம் முற்றிலும் ஆன்மீக மானது. அல்லாஹ் (துபாரக)வை திருப்திப்படுத்த கடுமையாக முயலும்போது தனது சமூகத்தின் ஆன்மீக நிலையை உயர்த்துவதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களால் வருடாந்த மாநாடு நிறுவப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனது அன்பான ஸஹாபாக்களே! எனது அன்பான ஸஹாபாக்களே! இந்த அசாதாரணமான மஸீஹின் உண்மையான ஜமாஅத் நாம்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!. ஜமாஅத் உல் ஸஹிஹ் அல் இஸ்லாம் தான் உண்மையான ஜமாஅத்தே அஹ்மதிய்யா ஆகும். அல்லாஹ் தனது இரண்டு மஸீஹ்களையும் அவனது ஜமாஅத்தின் தலைமையில் வைத்துள்ளான், மேலும் இந்த ஜமாஅத் உயிருடன் தொடர்ந்திருக்கும்; ஏனெனில் இஸ்லாமே அதன் உண்மையான அடிப்படையாகும். இஸ்லாம் இன்றி, இந்த ஜமாஅத் ஒன்றிற்கும் பயனற்றதாகும்! ஏனென்றால் நாம் நம்முடைய நேசத்திற்குரிய தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா(ஸல்) அவர்களின் நபித்துவத்துடன் ஒன்றிணைக்கப் பட்டுள்ளோம். எனவே, **இந்த ஜமாஅத்திற்க்கு பல பெயர்கள் உள்ளன, சில சமயங்களில் ஜமாத் அஹ்மதிய்யா, சிலசமயங்களில் இக்கால இறை வெளிப்பாட்டின் ஒரு புதிய நூற்றாண்டை வெளிப்படுத்திய ஜமாத் அஹ்மதிய்யா அல் முஸ்லிமீன், இன்னும் தற்போது இஸ்லாத்தின் வடிவத்தில் அவனது மற்றும் அவனது கலீஃபத்துல்லாஹ், அதாவது இந்த தாழ்மையான அடியான் மற்றும் இந்நூற்றாண்டின் மஸீஹ் [முனீர் அஹ்மத் அஸிம்] (அவர்களி)ன் விழுமிய வழிகாட்டுதலின் கீழ் அல்லாஹ் பூரணப்படுத்தியுள்ள ஜமாஅத் துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் ஆகும்.**

எனவே, இந்த மாநாட்டில் கலந்துகொள்ள, நீங்கள் உங்களது அன்றாட தினசரி வேலைகளை புறந்தள்ளிவிட்டு, இந்த தியாகத்திலிருந்து ஆன்மீக பலன்களை அறுவடை செய்வது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். உங்களுக்குத் தெரியும், நேரம் ஒரு விலைமதிப்பற்ற பயனுடைய பொருளாகும்; ஜலஸா ஸாலனாவில் கழித்த ஒவ்வொரு தருணத்தையும் அல்லாஹ்வை நினைவு கூறுவதிலும், அல்லது உங்கள் ஆன்மீக அறிவை அதிகரித்துக் கொள்வதிலும், இன்னும் சகோதரத்துவத்தின் பிணைப்பை வலுப்படுத்தி, உங்களிடையே (உள்ள)புதிய உறுப்பினர்களை வரவேற்றுக்கொள்வதிலும் நீங்கள் சாதகமாக்கி கொள்ள வேண்டும்.

ஆகவே, (அதன் பொருட்டு) நீங்கள் உங்களது குடும்பத்தினரையோ அல்லது தனிப்பட்ட பிரச்சினைகளையோ பின்னால் விட்டுவிட வேண்டும். மேலும் குறுகிய வட்டத்திற்குள் அமர்ந்து கொண்டு தேவையின்றி அரட்டை அடிக்கவும் கூடாது.

**காலப்போக்கில், இன்ஷா-அல்லாஹ், என்னைப் பின்பற்றுபவர்களின் - எனது நேர்மையான ஸஹாபாக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வருபவர்களின் எண்ணிக்கை காரணமாக இடப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் என்பதையும் கூறாமல் விட்டுவிடமுடியாது. உணவு விநியோகமோ எளிதானதாக இருக்காது என்றபோதிலும் கூட, அவனது திருப்திக்காக இந்த தியாகங்களை சகித்துக்கொள்பவர்கள் மீது அல்லாஹ் (துபாரக) பொழியும் அருட்களுடன் ஒப்பிடும்போது இந்த சிறு துன்பங்கள்கூட ஒன்றுமற்றதாய் இருக்கும்.**

எனவே ஒழுக்கத்தையும், புரிந்துணர்தலையும் காட்டுங்கள்! இந்த ஜமாஅத்திற் குள் உள்ள சகிப்புத்தன்மை நிறத்தையோ அல்லது இனத்தையோ கருத்தில் கொள்ளாதவாறு, அவற்றை (எல்லாம்) தாண்டி ஒளிவீசியவாரு எல்லா மனித குலத்திற்கும் சென்றடைய வேண்டும். இதற்காக நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும், ஜமாஅத்திற்காக முயற்சி மேற்கொள்ள இணங்கிக்கொள்ள வேண்டும். ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மாநாட்டிலிருந்து ஒரு சிறந்த மனிதராக வெளிப்படுவதே இந்த ஏற்பாட்டு திட்ட த்தின் வெற்றியாகும்.

முடிவுரைக்கு வருவதற்கு முன், ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் மிகவும் நேர்மையான உறுப்பினர்களான நாயிப் அமீர் கே.எம். சலீம் சாஹிப், அதே போன்று அமீர் சிராஜுதீன் சாஹிப், இன்னும் எஸ்.எச். ஃபைசல் சாஹிப், சுலைமான் சாஹிப் ஆகியவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தீன்-இ-இஸ்லாத்திற்காக மிக மிக கடினமான வேலைகளை செய்கிறார்கள், மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்கும் கீழ்ப்படி கின்றார்கள், கலீஃபத்துல்லாவுக்கும் கீழ்ப்படிகிறார்கள். மாஷா-அல்லாஹ், அல்லாஹு அக்பர்!

சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை! இந்த மக்கள் ஜமாஅத்துக்காக இரவும் பகலும் எவ்வாறு உழைக்கின்றார்கள் என்பதையும், இந்த காலத்தின் கலீஃபத்துல்லாஹ்விடம் அவர்கள் எவ்வாறு மிகவும் நேர்மையுடன் உள்ளார்கள் என்பதையும், கேரளாவிலும் உள்ள எனது சஹாபாக்கள்: அமீர் சாஹிப் [அதாவது அமீர் ஜமாலுதீன் மற்றும் அமீர் தாஹிர் சாஹிப் இருவரும்] மற்றும் டெல்லியிலும் கேரளாவிலும் உள்ள மற்ற உறுப்பினர்களைப் போன்றே அவர்களும் பல வேலைகளை, பல பெரிய வேலைகளை செய்வது குறித்து என் இதயத்தில் உள்ளதை என்னால் கூற முடியவில்லை. அந்தக் காரணத்திற்காக, முடிவுக்கு வருவதற்கு முன்பு, இந்த இரட்டைத் திட்டமான ஒரு புதிய மசூதியின்:சிராஜும் முனீர் மஸ்ஜித், அதே போல் அலுவலகங்கள், நூலகங்கள் ஆகியவற்றை கட்டுவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நாயிப் அமீர் கே.எம். சலீம் சாஹிப், அதே போல் அமீர் சிராஜுதீன் சாஹிப், இன்னும் எஸ்.எச். ஃபைசல் சாஹிப் சுலைமான் சாஹிப் மற்றும் மற்ற உறுப்பினர்களையும் நான் பாராட்ட விரும்புகிறேன். அல்லாஹ் அவர்கள் மீது அருள் புரிந்து, அவர்களின் குடும்பத்தினர் மீதும் ஏராளமான அருட்களை பொழிவானாக!,மன அமைதியுடன் வாழ, அல்லாஹ்வின் அருள் அவர்கள் மீது நிலவட்டுமாக! மேலும் அவர்களின் செல்வத்தில் ஏராளமான பரகத்தை

(அதாவது அருட்களை) ஏற்படுத்துவானாக!

இறுதியில் முக்கியமாக, கேரளா, டெல்லி மற்றும் தமிழ்நாட்டில் [கோட்டார், கோயம்புத்தூர், கண்ணூர் போன்ற இடங்களில் உள்ள] எனது ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவரையும் நான் முழு மனதுடன் பாராட்டுகிறேன்- எனது பிரார்த்தனையில் நான் உங்கள் அனைவரையும் நினைவு கூறுகிறேன். எனது ஒவ்வொரு பிரார்த்தனையிலும் நான் நினைவில் கொண்டு, உங்களுக்காக நான் பிரார்த்தனை செய்கின்றேன் என்பதில் என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்!

**உங்களுக்காக பிரார்த்தனை செய்ய - இந்த அழகான மசூதியை : “சிராஜ் ஜும்-முனீர்” மசூதியை நிர்மாணிப்பதில் மிகவும் பாராட்டத்தக்க வகையில் ஒத்துழைத்தவர்களுக்காக ஒரு சிறப்பு பிரார்த்தனை செய்ய உங்கள் பெயர் களையும் கூட எடுத்துக் கூறுகிறேன். இந்த கட்டுமானத்திற்கு உதவ அவர்கள் பெரும் தியாகங்களை செய்தனர். குறிப்பாக இந்த தொற்றுநோய் (கோவிட்-19) (னா)ல் வேலையிழந்து, வாழ்க்கை மிகவும் கடினமாகிப்போன இந்த (சூழலில் அது) எளிதானதல்ல! நிச்சயமாக என் ஸஹாபாக்கள் பலர் வேலையை இழந்தவர்கள். வேலை இல்லாமல் இருந்தாலும், அவர்கள் பெரிய பெரிய தியாகங்களை செய்திருக்கிறார்கள். பல வழிகளில் அவர்கள் பல வகையான தியாகங்களை, பெண்கள்-சிராஜ் மக்கீன்களும்கூட செய்திருக் கின்றார்கள். எனவே உண்மையாக, இந்த வேலைக்கு பண உதவிக்காக உருவாக்கப்பட்ட நிதிக்கு அவர்கள் தங்களால் முடிந்த வரை தாராளமாக பண உதவி அளித்தது மட்டுமல்லாமல், அவர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் கைகளால் (கூட) பணியாற்றினர், [அல்லாஹு அக்பர்!, மாஷா-அல்லாஹ்; பணத்தை தியாகம் செய்வது மட்டுமல்லாமல், தங்கள் கைகளால் கூட வேலை செய்வதுள்ளனர்; இந்த உன்னத வேலையில் தங்களது கை(களையும்) வைத்தனர்: சிராஜ்-உம்-முனீர் மஸ்ஜித்] இந்த கட்டிடத்தின் பௌதீகமாக கட்டுமானத்திற்காக தங்களையும் அர்ப்பணித்துள்ளனர்.** எல்லாவற்றிற்கும் மேலாக வலுவான ஒற்றுமை உணர்ச்சியின் திடீர் எழுச்சிகளில், ஜமாத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் உறுப்பினர்களை பாராட்டுங்கள்!, அவர்கள் எந்த வர்க்கத்தை அல்லது எந்த தொழில் அல்லது வணிகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த மசூதியை சிராஜும் முனீர் என்று அழைக்கப்படும் இந்த மஸ்ஜிதை எழுப்பும்போது இறைவனின் அடியார்களாக, அல்லாஹ் (தபாரக)வின் அடியார்களாக பணியாற்றியுள்ளனர், அக மலர்ச்சியுடன் (ஒரே உடல், ஒரே குடும்பம், ஒரு ஸஹீஹ் அல் இஸ்லாத்தைப் போன்ற இந்த கூட்டு முயற்சி) நல்ல மனப்பான்மையுடன் மகிழ்ச்சியுடன் பணியாற்றியுள்ளனர்.

**அவர்கள் அனைவரும் வேதனையில் இருந்தனர், அவர்கள் அனைவரும் இன்று ஒளியைக் காட்டும் விளக்காக இருக்கட்டும்! ஆம்! உயர் ஒழுக்க நெறியில் கவனத்தை ஈர்க்கும் விதமாக, ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் (ஜமாத்-உல் ஸஹிஹ்-அல்-இஸ்லாம்) ஜமாஅத்தை நோக்கி தங்கள் கடமையைச் செய்ததோடு மட்டுமல்லாமல், நான் அவர்கள் செய்துள்ள கடமைகளனைத் தையும் கூற முற்பட்டால், ஒருவேளை ஒரு அற்புதமான முயற்சியில் அவர்கள் ஒரு அசாதாரணமான தியாகத்தைச் செய்ததிலிருந்து அவர்களின் கடமையை விட (அவை) அதிகமாக இருக்கலாம்.**

எனது சஹாபாக்களே! (ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளே!)அது அல்லாஹ் (தபாரக)வால் தான், அல்லாஹ் மட்டும் தான் ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் இதயத்திலும் இந்த தியாகம்

எனவே, நான் எனது உரையை முடிப்பதற்கு முன், நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஸஹாபி, நேர்மையான ஸஹாபியாக இருக்கிறார். தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் / கோட்டாரில் உள்ள எனது அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன், ஏனெனில் இந்த நேர்மையான ஸஹாபி தனது சொந்தப் பணத்தில் அங்கு [இந்த இடங்களில் ஒன்றில்] ஒரு நிலத்தை வாங்கி, நமது ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாத்திற்காக ஒரு மசூதியை கோட்டாரிலோ அல்லது கோயம்புத்தூரிலோ கட்ட விரும்புகிறார். ஆகவே, விலை உயர்ந்ததாக இல்லாமல் ஏதேனும் நிலம் உள்ளதா என்று பாருங்கள்! அதனால் ஜமாத் உல் ஸஹிஹ் அல் இஸ்லாத்திற்காக அவரால் ஒரு நிலத்தை வாங்கி ஒரு மசூதி, நூலகம் போன்றவற்றைக் கட்டியெழுப்ப முடியும். இது அவரது விருப்பம் என்று என்னிடம் கூறியுள்ளார், கோயம்புத்தூரிலோ அல்லது கோட்டாரிலோ உள்ள நமது உறுப்பினர்களுக்காக, நமது ஸஹாபாக்களுக்காக ஒரு சிறிய நிலத்தை வாங்கும் அருள் அவருக்கு கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றார். அவரே இந்த மசூதியைக் கட்டுவார், மேலும் காலமான அவரது மறைந்த மகனின் பெயரையும் வைப்பார். அவர் தனது மகனின் பெயரில் இந்த மசூதியைக் கட்டுவார்.

எனவே, அல்லாஹ் அவர் மீதும் அவரது குடும்பதினர் மீதும் அருள்புரியவும், இந்த ஆசையை, இந்த உன்னதமான ஆசையை நிறைவேற்றவும் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இன்னும் இது கோட்டாரிலோ அல்லது கோயம்புத்தூரிலோ உள்ள நமது உறுப்பினர்களுக்கு நமது சொந்த மசூதி இருப்பது மிகவும் நல்ல செய்தியாகும்; அதனால் ஒவ்வொரு மாதமும் வாடகைக்கு வீடு தேடுவதைத் தவிர்க்கலாம். ஜமாஅத் உல் ஸஹிஹ் அல் இஸ்லாத்திற்கான மற்ற செலவுகளுக்காக இந்த பணத்தை சேமிக்க முடியும்.

மாஷா- அல்லாஹ் இன்றைக்கு இது ஒரு நல்ல செய்தியாகும். எனவே (அது குறித்து) எனக்கு தகவலை அனுப்புமாறு வேண்டுகிறேன், இந்த நிலத்தைப் பார்த்து எனக்கு அனுப்புங்கள், நாம் பார்ப்போம், அங்கு நமது உறுப்பினர்களுக்காக [என் சஹாபாக்களுக்கு] கோயம்புத்தூரிலோ அல்லது கோட்டாரிலோ ஒரு மசூதியைக் கட்டுவோம்!

ஆகவே,"வல்லமை மிக்க அல்லாஹ் நம் அனைவரின் மீதும் அவனது அருளை பொழிந்து, நமக்கு மன்னிப்பினை வழங்குவானாக! "என்று நாம் கட்டாயம் பிரார்த்திக்க வேண்டும். ஆமீன்! ஸும்ம ஆமீன்! யா ரப்புல் ஆலமீன்!



## கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்

இக்காலம் மிக ஆபத்தானது என்றும் கியாமத்தின் (இறுதி நாளின்) நெருங்குதலை பிரகடனம் செய்யும் என்றும் அல்லாஹ் (தபாரக்) எனக்கு பல முறை அறிவித்துள்ளான்.

சொல்லப்பட்டபடி, மரணம் பல வடிவங்களில் வெளிப்படும்: கொடிய வைரஸ்கள் (COVID-19 ஐப் போலவே, எதிர்காலத்திலும் இன்னும் ஆபத்தான வைரஸ்கள் தோன்றும்) நான் இன்று என்ன கூறுகிறேன் என்பதையும்,, அல்லாஹ் எனக்கு எதனை வெளிப்படுத் தியுள்ளான் என்பதையும் நம்புங்கள்! வருங்காலத்தில் தோன்றப் போகும் வைரஸ் மிக மிக மிக மிக ஆபத்தானது என்பதையும் நம்புங்கள்.

அதன் பின்னர் மூன்றாம் உலகப் போர் நமக்கு (மிக அருகில் உள்ளது), பஞ்சம், வறட்சி, வெள்ளப் பெருக்கு, குற்றச் செயல்கள், இன்னும் கூடுதலான பேரழிவை ஏற்படுத்தும் [நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான இளைஞர்களை (சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை) கொல்கின்ற] போதை மருந்துகள், பூகம்பங்கள் (பலர் தங்கள் உயிரையிழப்பார்கள், மேலும் பலர் அனாதை களாகவும் விதவைகளாகவும் ஆகிவிடுவார்கள்